பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**23 01 2026** **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. தமிழக மக்கள் ஆட்சிமாற்றத்தை கொண்டுவர தயாராகி விட்டார்கள் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. 18-ஆவது வேலைவாய்ப்பு திருவிழாவை பிரதமர் நாளை காணொலி வாயிலாக தொடங்கிவைக்கிறார்.

3. நாட்டில் ஜவுளித்துறையின் வளர்ச்சி கடந்த பத்தாண்டுகளில் இருமடங்கு உயர்ந்திருப்பதாக மத்திய அமைச்சர் திரு கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

4. தேர்தல் நடைமுறைகள் குறித்து உலக நாடுகளுக்கு பயிற்சி அளிக்க இந்தியா தயாராக உள்ளது என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு கியானேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

5. தோஹா சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Shndrela Das பட்டம் வென்றார்.

- இனி விரிவான செய்திகள் –

<<<<<<>>>>>>>

தமிழகத்தில் ஆட்சி மாற்றத்திற்கு மக்கள் தயாராகிவிட்டதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், திமுக ஆட்சியில் மாநிலத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று குற்றம் சாட்டினார்.

திமுக அரசின் தோல்விகளை பட்டியலிட்ட அவர், ஊழல், மாஃபியா மற்றும் குற்றங்களை ஆதரிக்கும் அரசாக திமுக செயல்படுவதாகவும் கூறினார்.

மாநிலத்தில் செயல்திறன் அற்ற குடும்ப ஆட்சி அகற்றப்பட்டு, மக்கள் நலனுக்கான சட்டத்தின் ஆட்சி கொண்டுவரப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆனால், திமுக அரசு இளைஞர்கள், விவசாயிகள், மகளிர் நலனில் அக்கறை செலுத்தவில்லை என்றும், சங்க காலத்தின் கலாச்சார மாண்புகளையும் மதிக்கவில்லை என்றும் பிரதமர் கூறினார்.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, தமிழகத்தில் ரயில்வேத் திட்டங்களுக்கு ஏழு மடங்கு நிதியை அதிகரித்து ஒதுக்கீடு செய்ததாகவும், ஏழை-எளிய விவசாயிகளுக்கு 50 ஆயிரம் கிசான் கடன் அட்டைகள் வழங்கியதாகவும் தெரிவித்தார்.

தமிழகம் போதைப்பொருள் புழக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் இருக்கும் இடங்களில் தங்கு தடையின்றி அவை விற்பனை செய்யப்படுவதாகவும் கூறினார்.

மத்திய அரசு சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு மூன்று லட்சம் கோடி ரூபாய் வழங்கியிருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

திருப்பரங்குன்றம் விவகாரத்தில் இந்து மக்களின் மத உணர்வுகளுக்கு எதிராக திமுக அரசு செயல்பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

பெண்களுக்கு மாநிலத்தில் பாதுகாப்பு இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மத்தியிலும் – மாநிலத்திலும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அமையும் பட்சத்தில், மக்களின் பாதுகாப்பு முழு அளவில் உறுதி செய்யப்படும் என்றும், அரசின் திட்டங்கள் தடையின்றி மக்களுக்கு கிடைக்கும் என்றும் பிரதமர் கூறினார்.

மத்திய அரசுடன் இணைந்து செயல்படும் அரசு மாநிலத்தில் அமைந்தால்தான் வளர்ச்சிப் பாதையில் பயணிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பேசிய அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, திமுக அரசுக்கு மக்கள் விடை கொடுக்கும் காலம் வந்துவிட்டது என்று கூறினார்.

மாநிலத்தில் அனைத்துத் துறைகளிலும் ஊழல் மலிந்து காணப்படுவதாகவும், சட்டம் – ஒழுங்கு முற்றிலுமாக சீர்கெட்டு விட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நாடு வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதாக கூறிய அவர், தமிழகத்தில் திமுக அரசு குடும்ப ஆட்சியை நிலைநாட்டவே அதிக கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்தார்.

மத்திய அரசோடு இணைந்து செயல்படும் அரசு தமிழகத்தில் அமைய வேண்டியது அவசியம் என்று கூறிய திரு எடப்பாடி பழனிசாமி, அப்போதுதான் மாநிலத்தின் வளர்ச்சியும் உறுதி செய்யப்படும் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பேசிய பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன், வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி மிகப்பெரிய வெற்றியை பெற்று தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில், பிஜேபி மூத்த தலைவர்கள் மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>>

**18-ஆவது வேலைவாய்ப்பு திருவிழாவை பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை காணொலி வாயிலாக தொடங்கிவைக்கிறார்.**

**நாடெங்கிலும் 45 இடங்களில் நடைபெறும் இந்த வேலைவாய்ப்பு திருவிழாவில், அரசு துறைகளில் 61 ஆயிரம் இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளையும் பிரதமர் வழங்க உள்ளார்.**

**மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களின் துறைகளில் அவர்கள் பணியாற்ற உள்ளனர்.**

**மத்திய உள்துறை அமைச்சகம், சுகாதாரம், நிதி சேவைகள், உயர்கல்வி உள்ளிட்ட முக்கிய துறைகளில் இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட உள்ளது.**

**புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும் என்ற நோக்கில், நடைபெற்றுவரும் வேலைவாய்ப்பு திருவிழாவில் இதுவரை 11 லட்சத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.**

**<<<<<<>>>>>>**

**நாட்டில் ஜவுளித்துறையின் வளர்ச்சி கடந்த பத்தாண்டுகளில் இருமடங்கு உயர்ந்திருப்பதாக மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.**

புதுதில்லியில் இன்று 74-ஆவது சர்வதேச ஆடை வடிவமைப்பு கண்காட்சியை தொடங்கிவைத்து பேசிய அவர், கடந்த 2014-ஆம் ஆண்டில் 8 புள்ளி நான்கு லட்சம் கோடியாக இருந்த ஜவுளித்துறையின் வளர்ச்சி தற்போது 16 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது என்று குறிப்பிட்டார்.

கடந்த 2025-ஆம் ஆண்டில் ஜவுளித்துறையின் உள்நாட்டு சந்தை 13 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது என்றும், கோவிட் பெருந்தொற்றுக்கு பிறகு ஜவுளி ஏற்றுமதி 25 சதவீதம் அதிகரித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த டிசம்பர் மாதத்தில் ஜவுளி தொழில்துறை 29 லட்சம் கோடி ரூபாய் வருவாய் ஈட்டியதாகவும் அவர் தெரிவித்தார்.

உற்பத்தியில் சாதனை படைத்தது மட்டுமின்றி, ஜவுளித்துறையில் ஏராளமான வேலைவாய்ப்புகளும் உருவாக்கப் பட்டிருப்பதாக அவர் கூறினார்.

ஆடை வடிவமைப்பில் வெளிநாடுகளை நம்பியிருந்த சூழ்நிலை மாறி, தற்போது இந்திய ஆடை வடிவமைப்பிற்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய ஜவுளி ஏற்றுமதியாளர்கள் உலக சந்தையை அணுகுவதற்கான வாய்ப்பை இந்திய சர்வதேச ஆடைகள் கண்காட்சி ஏற்படுத்தி தந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த கண்காட்சியில் இந்திய ஏற்றுமதியாளர்கள் தங்களது புதிய வடிவமைப்புகள் மற்றும் ஜவுளிப் பொருட்களை காட்சிக்கு வைத்திருப்பதாகவும் திரு கிரிராஜ் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தேர்தல் நடைமுறைகள் குறித்து உலக நாடுகளுடன் வெளிப்படையாக பகிர்ந்துகொள்ள இந்தியா விரும்புவதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு கியானேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிறைவடைந்த மூன்று நாள் தேர்தல் ஜனநாயக மற்றும் நிர்வாகம் தொடர்பான சர்வதேச கருத்தரங்கில் உரையாற்றிய அவர், வெளிநாடுகளில் உள்ள தேர்தல் அதிகாரிகளுக்கு வெளிப்படைத் தன்மையுடன் இந்தியா பயிற்சி அளிக்கவும் தயாராக உள்ளது என்றும் தெரிவித்தார்.

பல்வேறு நடைமுறைகளை பின்பற்றி, சட்டம் மற்றும் ஜனநாயகத்தை நிலைநாட்டும் வகையிலும் வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணி நடத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

வாக்காளர் பட்டியல் குறைகள் ஏதுமின்றி தூய்மைத் தன்மையுடன் தயாரிப்பதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தூய்மையான வாக்காளர் பட்டியல் ஜனநாயகத்தின் அடித்தளமாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு, தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்துவதற்கு தேவையான பயிற்சி மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் தேர்தல் அதிகாரிகளுக்கு வகுத்துத் தரப்பட்டுள்ளதாகவும் திரு கியானேஷ்குமார் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சட்டீஸ்கர் மாநிலம் தம்தாரி மாவட்டத்தில் ஏழு பெண்கள் உட்பட ஒன்பது நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

அம்மாநில காவல்துறையின் ராய்பூர் மண்டல காவல்துறை தலைவர் திரு அம்ரேஷ் மிஸ்ரா மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் திரு சூரஜ் சிங் முன்னிலையில் அவர்கள் சரணடைந்தனர்.

தங்களிடமிருந்த ஆயுதங்களையும் நக்சலைட்டுகள் காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

இரண்டு நவீன ரக துப்பாக்கிகள், இரண்டு எஸ்எல்ஆர் துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டன.

இந்த நக்சலைட்டுகள் மீது Nagri, Manipur, Gobra ஆகிய இடங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

80 வயதுக்கு மேற்பட்ட நாட்டின் மூத்த ஓய்வூதியதாரர்களின் 815 கோரிக்கைகளுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளதாக மத்திய பணியாளர் மற்றும் ஓய்வூதியதாரர் நல அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அரசின் 30 அமைச்சகங்கள் மற்றும் துறைகளை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓய்வூதியதாரர் குறைகளுக்கும் தீர்வுகாணப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு, உள்துறை, நிதி, அஞ்சல்துறை, வீட்டுவசதி மற்றும் சிவில் விமான போக்குவரத்துத் துறைகளை சேர்ந்த ஓய்வூதியதாரர்களின் பிரச்சினைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

**தோஹாவில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Shndrela Das பட்டம் வென்றார்.**

**19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் 11-8, 11-9, 10-12, 11-6 என்ற செட் கணக்கில், இந்தியாவின் Divyanshi Bhowmick -ஐ வென்றார்.**

**------------------**

**மஸ்கட் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manush Shah – Diya Chitale இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.**

**கலப்பு இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 10-12, 8-11, 11-8, 11-8, 11-8 என்ற செட் கணக்கில், பிரான்சின் Thibault Poret – Charlotte Lutz இணையை வென்றது.**

**---------------**

**அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.**

**மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், 11-3,11-6, 9-11, 11-13 என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் Lucy Turmel –ஐ வென்றார்.**

**-----------**

ராய்பூரில் நடைபெற்றுவரும் இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்துவரும் நியூசிலாந்து சற்றுமுன்வரை 33 ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 43 ரன் எடுத்துள்ளது.

**<<<<<<END>>>>>>**